செ.வெ.எண் : 252/2019 நாள் : 23.03.2019

**நாடாளுமன்ற தேர்தல் - 2019 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM Machine) மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனை இயந்திரங்களை (VVPAT) வாக்குச்சாவடிகளுக்கு முதற்கட்ட கலக்கல் முறையில் (First Randomization) ஒதுக்கீடு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக சிறு கூட்டரங்கில் நாடாளுமன்ற தேர்தல் - 2019-ஐ முன்னிட்டு, மின்னணு வாக்குப்பதிவு (EVM Machine) இயந்திரம் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனை இயந்திரங்களை(VVPAT) வாக்குச்சாவடிகளுக்கு கணினி மூலம் முதற்கட்ட கலக்கல் முறையில் (First Randomization) ஒதுக்கீடு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் இன்று (23.03.2019) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்ட ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு, தொகுதி வாரியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனை இயந்திரங்கள் இயந்திரங்களை வாக்குச்சாவடிகளுக்கு கணினி மூலம் முதற்கட்டமாக கலக்கல் முறையில் (First Randomization) ஒதுக்கீடு செய்யும் பணி அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திரு.என்.எஸ்.கே.கிருஷ்ணகுமார் (பி.ஜே.பி), திரு.விஜய ராஜா (காங்கிரஸ்), வழக்கறிஞர்.கே.எல்.எஸ்.ஜெயகோபால்(அ.தி.மு.க), வழக்கறிஞர்.பி.லீனஸ் ராஜ் (தி.மு.க), திரு.எஸ்.மணிகண்டன் (தே.மு.தி.க), திரு.என்.எஸ்.கண்ணன் (சி.பி.ஐ (எம்)), திரு.ஆர்.கே.ஸ்ரீகுமார் (சி.பி.ஐ.), திரு.டேனியல் (பி.எஸ்.பி) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---